STC.No. 321/2025 DW1.திரு.சுந்தரமூர்த்தி

தேதி– 16.07.2026

எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் போடி காவல்நிலையத்தில் ஹோம் கார்டாக வேலை பார்த்தேன் என்றால் சரிதான். எனது மனைவிக்கு சேர்த்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வைரமணி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் வாங்க மறுத்து விட்டேன் என்றால் இல்லை, நான் அப்போது ஊரில் இல்லை. காசோலையில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது மற்றும் எனது மனைவியுடையது என்றால் இரண்டாவது இருக்கும் கையொப்பம் என்னுடையதாகும், முதல் கையொப்பம் எனது மனைவியின் கையொப்பம் இல்லை. வைரமணியிடம் நான் 5 லட்சம் பணம் பெற்றுக் கொண்டு காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முருகேசனிடம் காசோலை கொடுத்ததாக வழக்குக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முருகேசன் காசோலை கொடுக்கவில்லை என்று அவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் தான் நான் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் நான் எஸ்.பி அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகார் சம்பந்தமாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் என்னை அழைத்து விசாரித்தார்கள். முருகேசனை விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது.

2. நான் பொய்யான விபரங்களை கூறி புகார் கொடுத்துள்ளதால்தான் மேற்படி புகார் சம்பந்தமாக நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எ.சா.ஆ.4, எ.சா.ஆ.5 ல் புகார்தாரர் வைரமணிக்கு பணம் கொடுத்ததாக இல்லை என்றால் சரிதான். காசோலை யாருடையது என்றால் எனது மனைவியுடையது ஆகும். எனது மனைவியிடம் நீதிமன்றம் பிரிவு 351 (1)(b) ன் கீழ் கேட்கப்பட்ட கேள்களில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால்

எனது மனைவியுடையதாகும். மேற்படி ஆவணத்தில் உள்ள கையொப்பமும், காசோலையில் உள்ள கையொப்பமும் ஒன்றாகதான் உள்ளது என்றால் இல்லை. காசோலையில் உள்ள கையொப்பம் எனது மனைவியின் கையொப்பம் இல்லை என்றால் காசோலையானது Signature Differ என்று காரணம் குறிப்பிட்டு திரும்ப பெற்றிருக்கும் என்றால் சரியல்ல. காசோலையை குறித்து ஸ்டாப் பெமென்ட் செய்யும்படி நான் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். முருகேசன் என்பவரை வைத்து பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. நானும், எனது மனைவியும் நேரடியாக கையொப்பம் செய்து புகார்தாரரிடம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. காசோலை தொகையை கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றால் இல்லை. நான் கணக்கு வைத்திருக்கும் வங்கி மேலாளரை விசாரிக்க தயாரா என்றால் தயார்.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.16 15:06:48 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam